மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பஸ்களின் வேகத்தை அதிகரிப்பது சாலைகளின் அமைப்பைப் பொறுத்திருக்கிறது. பொதுவாக, தேசிய நெடுஞ் சாலைகளில் செல்லுகின்ற பஸ்களின் வேகத்தை அதிகரித்திருக்கிறோம். எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறோம் என்றால் மின்னல் வேகத்தில் இங்கிருந்து நாகர்கோயிலுக்கு பஸ் விடுகிறோம். அந்த அளவுக்குப் பயணிகள் செல்லு கின்ற நேரம் குறைந்திருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்குத்தான் ஓவர் டைம் கிடைப்பதில்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீண்டதூரம் துரித பஸ்களில் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகள் சோர்வின்றி இருக்க, நல்ல இசைத் தட்டுகள் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இசைத் தட்டுகள் பிரயாணிகளின் சோர்வை நீக்கலாம். ஆனால் இந்த இசையிலே டிரைவர் கவனம் செலுத்தினால், இசைத் தட்டுகள் அந்த பிரயாணிகளின் உயிரையும் போக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நெடுந்தூரம் செல்கின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களில் உள்ள சீட்டுகள் நல்லமுறையில் இல்லை. இந்தக் குறை நீண்ட நாட்களாகச் சொல்லப்பட்டும் நிவர்த்திக்கப்படவில்லை. இதைப் பரிசீலிக்க அமைச்சரவர்கள் சென்னையிலிருந்து, நாகர்கோவில் வரையில் பிரயாணம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இருக்கைகள் நல்ல முறையில் இருப்பதற்கு போக்குவரத்துத்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கான குஷன் நமக்கு கிடைக்கவில்லை. நாம் அதற்கான ஆர்டர் கொடுத்தும், சென்ற யுத்தத்தின் காரணமாக நமக்கு இன்னும் குஷன்கள் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் குஷன்கள் பொருத்தப் பட்டு, நல்ல இருக்கைகள் அமைக்கப்படும். நான் பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் அமைச்சராவதற்கு முன்னாலேயே எல்லா பஸ்களிலேயும் சென்றிருக்கிறேன். ஆனால் ஒருநாள் கூட மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களைப் பார்த்ததில்லை.

பெத்தசெட்டிபுரம் அரிசனங்களுக்கு நிலப்பட்டா

*** 457 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூர் நகரில் பெத்தசெட்டிபுரம் அரிசன மக்கள் வாழும் பகுதியில் 1967 அல்லது 1968-ல் பட்டா ஏதேனும் கொடுக்கப் பட்டுள்ளதா ?

1972 மார்ச் 13]

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (ஆ) இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அந்த இடத்தில் 1968-க்கு முன் 40 பேர்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது அரசாங்க புறம்போக்கு நிலம் என்றும், நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டிருந்தால், எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அதன் மதிப்பு என்ன என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி, கோவை மாவட்டம், திருப்பூர் நகரில் பெத்தசெட்டிபுரம் அரிசன மக்கள் வாழும் பகுதியில் 1967 அல்லது 1968-ல் பட்டா ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்பது. குறிப்பிட்ட இடத்தில் பட்டா எதுவும் கொடுக்கப்பட வில்லை. புறம்போக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டதா இல்லையா என்பதற்கு தனியாகக் கேட்டால் விசாரித்து பதிலளிக்கப்படும்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 458 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் துணை வட்டத்தில் பூதூர், பெரிய சோழியம்பாக்கம், பாலவாக்கம், எளாவூர், பழைய கும்மிடிப்பூண்டி ஆகிய அரிசன காலனி மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (1) பூதூர், பெரிய சோழியம் பாக்கத்தைப் பொறுத்தமட்டில், 4 (1) பிரிவின்கீழ் அறிவிப்புகள் ஏற்பளிக்கப் பட்டு தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. 5-ஏ விசாரணை நடைபெற வேண்டியுள்ளது.

2. பாலவாக்கம் கிராமத்தைப் பொறுத்த மட்டில், வரைவு

அறிவிப்புச் செயற்குறிப்புகள் வருவாய்த்துறை (நிலவரி) வாரியத் துடன் முடிவுபெறாமல் உள்ளன.

3. எளாவூர் பொறுத்த மட்டில் பிரிவு 6-ன் கீழ் அறிவிப்புகள் கிடைக்கப் பெற்று அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. கும்மிடிப்பூண்டி கிராமத்தைப் பொறுத்தமட்டில், 4(1) பிரிவின்கீழ் அறிவிப்பு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இன்னும் முடிவு பெறாமல் உள்ளன.